கவிதை : மழை வாழ்த்தும் காதலர் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா , மெல்பேண், அவுஸ்திரேலியா -
Monday, 23 March 2020 22:45 - Last Updated Tuesday, 14 April 2020 10:32

வாழையிலை குடையாக
வதனமெலாம் மலர்ச்சியுற
விண்ணின்று பன்னீராய்
மழைத்துளிகள் சிந்திடவே
நாளைதனை நினையாமல்
நனையுமந்த திருக்கோலம்
பார்ப்பவரின் மனமெல்லாம்
பக்குவமாய் பதிந்திடுமே !

உலகநிலை தனைமறந்து
உளமகிழ்வு முகம்காட்ட
மழைநனையும் அழகுநிலை
மனமதனில் அமர்கிறதே
களங்கநிலை காணாத
காதல்நிறை பிணைப்பாக
கதைதொட்டு நிற்குநிலை
களிப்பூட்டி நிற்கிறதே !

ஏழ்மையது எழிலாக
இங்குருவாய் ஆகியதே
ஆழமுடை அன்புநிலை
அருகணைந்து தெரிகிறதே
வாழையிலை மகிழ்வுடனே
காதல்கண்டு மகிழ்கிறதே
மழைகூட இவர்களுக்கு

1 / 2

கவிதை : மழை வாழ்த்தும் காதலர் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா , மெல்பேண் , அவுஸ்திரேலியா -
Monday, 23 March 2020 22:45 - Last Updated Tuesday, 14 April 2020 10:32

வாழ்த்துக் கூறி நிற்கிறதே !

jeyaramiyer@yahoo.com.au

2 / 2